1979 மார்ச் 7]

செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலி.

*வினா எண். 264—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திரு. தேவநேயப்பாவாணரின் சொற்பிறப்பியல் அகர முதலி வெளியீட்டுப்பணி தற்போது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: செந்தமிழ் சொற் பிறப்பியல் அகர முதலியின் முதல் மண்டல முதற்பகுதி, காலிப் பட்ட அளவில் (Foolscap size) 1,300 பக்கங்கள் தட்டச்சடிக்கப்பட்டு அச்சிற்கு அணியமாயிருக்கின்றது. அச்சிடும் பொருட்டு அச்சகங்களிடமிருந்து மதிப்பீடுகள் கோரப் பட்டுள்ளன.

திரு. மா. மணிமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, பாவாணர் அவர்களுக்கு வயது அதிகமாகிவருகிறது, ஆகவே இந்த வேலையை விரைந்து செயல்படுத்தி முடித்தால், சிறப்பான இந்த வேலைக்கு அவருக்கு அரசு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறது. ஆகவே அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுத்து, இப்பணியை விரைவில் செய்து முடிப்பதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பாவாணர் அவர்களே இதற்கு 12 ஆண்டு காலமாகும் என்று சொல்லியிருக்கிறார்கள். திட்டமிட்டபடி பணிகள் நடைபெறுவதற்கு அரசு நிச்சயமாக உதவி செய்யும்.

கரூர் அரசினர் கலைக் கல்லூரி.

*வினா எண். 265—திரு. கு. வடிவேல்: மாண்புமிகு கல்வித் துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரில் உள்ள அரசினர் கலைக் கல்லூரியில் மேல் பட்டப் படிப்பு வகுப்புகள் ஆரம்பிக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) 1978–79ஆம் ஆண்டிலிருந்து தாவரவியல் பட்ட மேற்படிப்பு வகுப்பு துவங்கப்பட்டு விட்டது.

திரு. கு. வடிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, கரூரில் இருக்கின்ற இந்தக் கல்லூரிக்கும்— திருச்சிக்கும் இடையில் ஐம்பது மைல் இருக்கிறது. ஈரோட்டுக்கும் கரூருக்கும் இடையில் ஐம்பது மைல் வித்தியாசம் இருக்கிறது. இடையில் கரூரில் இருக்கின்ற இந்தக் கல்லூரியில் தாவரப்படிப்பைத் தவிர பட்ட மேற்படிப்புக்கு எந்தவிதமான வழியுமில்லை. இது மாணவர் களையும் திருப்தி படுத்தவில்லை. மேற்கொண்டு பட்டப் படிப்பு வகுப்புகளை கரூரில் உள்ள கல்லூரியில் ஏற்படுத்துவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இத்தகைய குறை பாடுகள் பல கல்லூரிகளில் இருக்கலாம், இப்போது எடுத்துக் கொண்டிருக்கின்ற நடவடிக்கைகள் மூலமாக பல கல்லூரிகளிலும் புதிய பட்ட மேற்படிப்புகள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. பல்கலைக் கழகம்தான் இந்தக் கோரிக்கை களைப் பரிசீலனை செய்கின்றது. பல்கலைக் கழகம்தான் இதற்கு அனுமதி வழங்கவேண்டும்.

திருச்செந்தூரை நகராட்சியாக்கல்.

*வினா எண். 266— திரு. இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் திருச்செந்தூர், காயல் பட்டிணம், ஆறுமுகனேரி, கானம் ஆகிய பேரூராட்சி மன்றங் களை இணைத்து திருச்செந்தூர் நகராட்சியாக மாற்றி அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டியிலிருந்து செயல்முறைக் வரும் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.